# முதன்மை மாவட்ட நீதிமன்றம் விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்,

## அமர்வு வழக்கு எண்.125/2021

அரசு தரப்பு சாட்சி 3 (LW10 ) வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | C.P.ராதாகிருஷ்ணன் | வட்டம் | - | |
| த/பெ | - | பெரியகருப்பன் | சாதி | - | |
| வயது | - | | மதம் | - | |
| கிராமம் | - | | தொழில் | - | |

இன்று 16.04.2026, 1969ம் ஆண்டு மத்திய சட்டம் 44ன் படி திருமதி. க.தீபா Bench Clerk Gr-1 அவர்களால் சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

(எதிரிகள் 1, 3முதல் 7 ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் தற்போது கடலூர் மாவட்டத்தில் நெய்வேலி துணை காவல் கண்காணிப்பாளராக பணிபுரிந்துவருகிறேன். கடந்த 10.02.2017 அன்று திண்டிவனம் நகர காவல் நிலைய ஆய்வாளராக பணியில் இருந்தபோது திண்டிவனம் நகர காவல் நிலைய குற்ற எண்.414/2016 பிரிவி 5 of Indian Explosive Substance Act 1908 படி வழக்கு கோப்பினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். உதவி ஆய்வாளர் ஏற்கனவே இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்து, பின்னர் எதிரிகள் ஆனந்தன் (எ) மிலிட்டிரி ஆனந்தன், சுதாகர், இசை (எ) இளையராஜா, மஸ்தான், சுரேஷ ஆகியோர்களை கைது செய்து சுரேஷ், மிலிட்டிரி ஆனந்தன் ஆகியோர்களிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்று சம்பவ இடத்தில் இருந்த பொருட்களை மகசரில் கைப்பற்றி எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு ஒப்படைத்து பொருட்களை நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார். பின்னர்

கோப்பு எனது பார்வைக்கு வைக்கப்பட்டு அவர் விசாரித்த சாட்சிகளை நானும் விசாரித்தேன். அதில் உள்ள சங்கதிகளையே என்னிடமும் கூறியதால் புதிய வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. பின்பு இவ்வழக்கின் சொத்துக்களை நீதிமன்றம் மூலமாக தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்ப ஒரு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். அந்த வேண்டுகோள் கடிதம் அதசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த ஆய்வகத்திலிருந்து பெறப்பட்ட அறிக்கை அதசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

ஆய்வக அறிக்கையை பெற்று இவ்வழக்கின் சாட்சிகளான தடய அறிவியல் ஆய்வாளர் மஞ்சுளா தேவி மற்றும் உதவி இயக்குனர் சண்முகம், வெடிகுண்டு சிறப்பு உதவி ஆய்வாளர் மாணிக்கவாசகம் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னிட்டு நான் இந்திய வெடிபொருள் சட்டம் பிரிவு 5 படி இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். நான் தாக்கல் செய்த சமயத்தில் மாவட்ட குற்றவியல் நடுவரிடம் இருந்து சம்மத கடிதம் பெறாததால் பின்னிட்டு தற்போதைய மாவட்ட குற்றவியல் நடுவர் அவரிடமிருந்து ஒரு சம்மத கடிதம் பெறப்பட்டது. அந்த சம்மத கடிதம் அதசாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

1ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை (மற்ற எதிரிகள் தரப்பில் இதே குறுக்குவிசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது)

இந்திய வெடிபொருள் சடத்தின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு மேற்படி சட்டப்பிரிவு 7ன் படி மாவட்ட நிர்வாக நடுவரிடம்(District Magistrate Sanction) சம்மதம் பெறவேண்டும் என்பது எனக்கு தெரியும் என்றால் தெரியும். இந்த வழக்கில் இறுதி அறிக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு மாவட்ட நிர்வாக நடுவரிடம் (District Magistrate Sanction) சம்மதம் பெறவில்லை என்றால் சரிதான். நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளரை

விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் அவர் முதல் புலன்விசாரணை செய்திருந்த காரணத்தால் நான் அவரை விசாரிக்கவில்லை. நான் காவலர் சங்கர் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான், தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அவர் சான்றுபொருட்களை ஆய்விற்காக எடுத்துசென்றதால் அவரை விசாரித்தேன். மற்ற சாட்சிகளின் வாக்குமூலம் நான் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். சங்கர் நான் விசாரித்தபோது அளித்த வாக்குமூலத்தில் கிராம நிர்வாக அதிகாரியின் பெயரை குறிப்பிட்டு சொன்னாரா என்றால் இல்லை. அவர் வாக்குமூலத்தில் கிராம உதவியாளர்கள் இருவர் பெயரை குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அந்த இரண்டு நபர்களின் பெயர்களும் தவறானவை என்றும் அவ்வாறு எந்த நபர்களும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. முறையாக விசாரணை செய்திருந்தால் சாட்சிகளின் பெயர் முறையாக குறிப்பிடப்பட்டு சாட்சிகளின் பட்டியலில் குறிப்பிடப்பட்டிருக்கும் என்று சொன்னால் சரியல்ல, தட்டச்சு பிழை காரணமாக தவறு ஏற்பட்டது. நான் சாட்சிகளை சரிவர விசாரிக்கவில்லை என்றும் உதவி ஆய்வாளர் பதிவு செய்த பொய் வழக்கிற்கு சாதகமாக இறுதி அறிக்கை தாக்கல் செய்து நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ARUMUGAM MANIMOZHI
Digitally signed by ARUMUGAM MANIMOZHI
Date: 2026.04.16 17:56:05 +0530

Principal District Judge,
Villupuram.